1983 சனவரி 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை விதி 54-ன் கீழ் கவன ஈர்ப்பு மூலமாகவோ உரிமைப் பிரச்சனை மூலமாகவோ கேளுங்கள். சட்டப்பேரவை விதிமுறைகளை வேண்டுமானால், ஒரு காப்பி கொடுக்கச் சொல்கிறேன்.

(இ) தஞ்சையில் விவசாயிகள் பாதிப்பு.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே உள்ள விவசாயிகள் கடும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி திடீர் திடீரென்று எழுந்து கேட்டால் தஞ்சை மாவட்டத்திலே பாதிக்கப்பட்டவர்களுக்கு நான் அனுதாபம்தான் தெரிவிக்க முடியும், நான் அவ்வளவுதான் செய்ய முடியும், வேறு ஒன்றும் செய்யமுடியாது. வரைமுறைகளின்படி அவைகளைக் கொண்டுவாருங்கள். ஒரு மணி நேர விவாதம் வேண்டுமானால் கேளுங்கள். அதை அனுமதிப்பதற்கு நான் முயற்சி எடுக்கிறேன். அந்த உதவியைத் தான் நான் செய்யமுடியும். நாளையிலிருந்து எல்லாம் எடுத்துக் கொள்ளலாம்.

(ஈ) வி. ஐ. பி-க்களுக்காக ஒதுக்கப்பெற்ற மின் தூக்கியில் சட்டமன்ற உறுப்பினர்களை அனுமதிப்பது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ள விஷயமாக இருப்பதால் நான் தெரிவிக்கிறேன். 24 ஆம் தேதி அன்று மாலை 4-30 மணிக்கு புதிய பில்டிங்கிற்கு நான் சென்று கொண்டிருந்தேன். அங்கே இதுவரைக்கும் எம். எல். ஏ.க்கள் தாராளமாக லிப்டில் போய்க்கொண்டு இருந்தோம். யாரும் தடுத்து நிறுத்துவது இல்லை. ஆனால் அன்றைக்கு நான் போனபோது அங்கே இருந்த, காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்த ஒரு போலீஸ்காரர் 'மேடம், மேடம் போகாதீர்கள், என்று சொன்னார். அய்யா, நான் எம் எல். ஏ. அய்யா என்று நான் சொன்னேன். நான் அதிகாரிகளிடத்திலே சில வேலைகளுக்காகச் செல்கிறேன் என்று சொன்னவுடன் உங்கள் பாஸைக் காடுங்கள் என்று சொன்னார். உடனே நான் பாஸை எடுத்துக் கொடுத்தேன். அவர் கேவலமான முறையிலே, வேறு எதுவும் வார்த்தை பேசவில்லை, இதில் வி. ஐ. பி. தான் போகலாம் என்று சொன்னார். இந்த பாஸை கையில் வைத்துள்ள எம்.எல்.ஏ.க்கள் எல்லாம் வி.ஐ.பி.-க்களா இல்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு என். சங்கரய்யா: இது மிகவும் மோசமான விஷயம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் ஒரு பிரச்சினையை இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இங்கே உள்ள பத்து அடுக்கு மாளிகையில் இரண்டு தூக்கிகள் இருக்கின்றன. இரண்டையும் சாதாரணமாகப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். முக்கியமான மாநாடோ மற்றவைகளோ நடைபெறுமானால் அந்த மாநாட்டிலே முக்கியமானவர்கள் எல்லாம் கலந்து கொள்கிறபோது ஒரு லிப்டை அவர்களுக்கு என்று ஒதுக்கிவிட்டு மற்றொரு லிப்டை அந்தப் பல்லடுக்கு மாளிகையிலே பணியாற்றுகிற பல்வேறு அதிகாரிகளும் அலுவலர்களும் பயன் படுத்த வேண்டுமென்ற ஒரு முறை வகுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த வகையிலே ஏதேனும் ஒரு மாநாடு நடைபெறுகிற போது ஒன்றை அதற்கென்று தனியாக ஒதுக்கிவைப்பது உண்டு. ஆனால் எம். எல். ஏ.க்களைப் பொறுத்தவரையிலும் அவர்களைத் தடுத்து நிறுத்தினார்கள் என்று சொல்வது உள்ளபடியே வருந்த வேண்டிய ஒன்று. வி. ஐ. பி. யைத்தான் அனுமதிப்போம், இல்ல விட்டால் இல்லை என்று சொன்னதாக சொன்னார்கள். அவர்கள் நாங்கள் வி. ஐ. பி. இல்லையா என்றார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் வி. ஐ. பி.க்கள் அல்ல, வி. வி. ஐ. பி.க்கள்தான். 'வெரி இம்பார்ட்டன்ட் பெர்சன் அல்ல' 'வெரி வெரி இம்பார்ட்டன்ட் பெர்சன்' என்று கருதப்பட வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரைக்கும் அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் இந்த அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அவர்களுக்கு எல்லாம், அலுவலகத்திற்கு வந்தாலும், அவரவர்களுடைய அலுவலகங்களுக்கு வந்தாலும் அதிகாரிகளை, மற்றைய அலுவலர்களை சட்டமன்ற உறுப்பினர்கள் பார்க்கவந்தாலும் அவர்களுக்கு எல்லாம் உரிய மரியாதை கொடுக்கவேண்டுமென்று தனியாக ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்களுக்கு அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது என்றால் அது வருந்தத்தக்க ஒன்று. அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடை பெறாமல் இருப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அதை அரசு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(உ) கவன ஈர்ப்பு அறிவிக்கைகள்

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் போன்றவைகள் கொடுக்கிறபோது அதைத் தாங்கள் மறுத்தாலும் கூட அதை சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும் துறைகளுக்கும் நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கிறீர்கள். அதே நடைமுறையை கவன ஈர்ப்புக்கும் அமல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.